முகத்தமா மிரண்டு மின்றி முளைதெழு மநைத நுங

மிகத்தனி திரமாய் நிற்றி யகத்தரு விளம்பு நேரிற்
சுகத்தரு நிற்றி யேலு நன்றிது துயரொான் றில்லை.

முன்னிய கத்த ரூகி யான்சக முறைசெய் கின்றே
னன்னிய நினைவி லாமை யாலதில் விகார மில்லை
யென்னது நீநான் செய்தேன் செய்திலே னென்னும் பார்வை
யுன்னிய பொழுதே துன்ப முடலோடா னென்பா ருண்டோ.

மொய்யுட ரூனே யென்னின் மூவேழு நாகு மஃதே
வெய்யவன் றுயரா மேலு மெய்யையா னென்ன வேண்டா
வையமில் கேள்வி நல்லோர் நினைவதோ வனைத்தா மூலுங்
கையுறத் தின்ப மேலு நாய்ப்பினைங் கவாரார் நீசர்.

நாமுட லென்னு மாசான் ஞாநக்கண் குருடாய்ப் போகுந்
தோழுறு மதனைத் தூரத் தூர்ப்பமேற் சோதி ஞாந
மாழுகி விலாநி லாப்போல் வயங்கிடு மினைய கண்ணு
லேழுறு பிறவி வேலை யிருங்கரை யெளிது தோன்றும்.

அனைத்திலுங் கத்த னல்லே னவனினை னல்லே னென்ன
நினைத்துளத் துறுதி யாகி நிற்றியா லஃதின் றென்னி
லனைத்திலுங கத்த ரூனே யளவறு மதுநா னென்ன
நினைத்தசை வொன்று மின்றி நிச்சய மாகி நிற்பாய்.

அன்றெனி லொன்று மல்ல வொன்றுநா மாகு மென்றே
நின்றவிப் பதத்தி னன்று நின்பதந் தனினீ நிற்பா
யொன்றெனும் பதத்தைக் கண்ட வுதமர் தன்பா னிற்பர்
துன்றுவா தனையே பந்தந் தொல்லைவீ டதனைத் தீர்த்தல்.

புலன்களிற் பழகிச் சித்தம் பூண்டவா தனைகண் முன்னே
யலம்பெற மாற்றி வீட்டிற் கடுத்தவா தனையுந் தீர்வாய்
நலந்திக ழுருள்சக் தோட்ட சட்புதா சமமிர் நாலு
மலந்தவிர் குணங்க ளாக மநத்தழுந் தாது செய்வாய்.

உள்ளுறு தொழில்கண் முற்று மொருக்கியோ ருணர்வைப் பற்றி
மெள்ளவாங் கதுவு மந்தக் காரணங்க ளுடனே விட்டுத்
தள்ளுவ வெல்லா மெததாற் றள்ளிரு யதுவுந தள்ளித்
தெள்ளுணர் வுள்ளுஞ் செயகை தேசிரு ளனைததுந் தீர்ந்து. 11

வாதனை வடிவ மான விவைகளு மற்றி வற்றைப்
பேதமாய்ப் பழகு வோனும் பிராணனி லியக்கந் தானு
மியாதுமூ லத்தோ டூர்த்து விண்ணக மென்ன நின்று
லியாதுதீர் சாந்த ருவென் றுயினை யதுநீ மெய்யால். 12

உள்ளத்தினி லனைத்து மாற்றி யுலகிலோர் பற்ற தின்றித்
துளக்கிலா நிலையி னின்றோன் றுகளறு முத்த னுவா
னளக்கரு மீச னுவா னவன்மிகு சமாதி தானுங்
கொளத்தகு கருமந் தானுங் கூடினும் விடினு மூத்தன். 13

இருதயத் தாசை யொன்று மிலாமையா லெண்ணப் பட்ட
கருமங்கள் செய்துந் தீர்த்துங் கையுறு பயனென் றில்லை
யொருவழிப் படநீள் கால மூளமொருப் படுத லாலே
பெருகுவா தனைதீ ரெஞ்சிற் பேசுநா லனைத்தும் வேண்டா. 14

மறுகுவா தனைக ளூந்த மெள்ளத்தை யொழிய வேறு
றுகதி நல்ல தில்லை யுணர்வன் வுணாதத தாகுந்
துறுதிசை பதத்துஞ் சுற்றி மீணடதாந் தொல்லை ஞாலத்
தறுதியா யுண்மை கணடோர் சிலர்நின்று ரவததின் மாய்வோர். 15

தேகத்தை நோக்கி யன்று செகமெலாந் திரிவ தல்லா
லேகத்தை நோக்கி யன்றே வெங்கணும் பஞ்ச பூத
நாகதனை மண்ணீக் கிழை நாடினு மாறு காணே
மோகத்தை விடுது மென்றே திடமுற்றார் முழுதும் பற்றார். 16

ஊகமின் மூகர்க் கெல்லா மூழிவெங் கடலாஞ் செம்ம
மோகமி லூகத் தோர்க்கு முன்னுறு கோவின் ரூளாஞ்
சோகமின் ஞாங்கி நெஞ்சிற் ரூடர்ந்தசிற் றின்பம் பற்ரூப்
போகமில் சிற்றூர்ப் புன்பெண் பொலிககர் விடலைக் கென்னும்.

பிரமமாஞ் சுத்த வேலை நுரைகளாம் பிறங்க லெல்லாம்
பாமவா தித்தன் முன்னர்க் கானலாம் பரவை ஞாலங்
திரமதா மிதனை முன்னே செப்பினன் வியாழன் றந்த
வாமகன் கசனும் பேரோன் மற்றது வள்ளல் கேட்பாய்.

கசனுயர் சமாதி நீங்கி யொருபகற் களிக்கு நெஞ்சன்
வசமறத் தழுத ழுத்த வசுதத்தன் யாது செய்கேன்
நிசையுற வெங்கு செல்கேன் நீர்ப்பதென் கொள்வ தென்னு
மிசையுயர் கற்ப நீர்போன் மேதினி யெங்கு காணே.

மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்
வானில்லை யகத்தி லெங்கு கானன்றி மற்ரூன் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லைத்
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்த மென்ரூன்.

4—5. கசன் கதை முற்றிற்று.

ஆக விருத்தம்—759.

4. திதிப் பிரகரணம்.

பெறற்கொ ணுதசத் துவகுணப் பிறப்பினர் புவிமே
னிறத்து வாழ்வது வான்றிகழ் நிறைமதி நிகராம்
வறக்குந் தன்பத்தில் வாடல நீரவுதான் வரினுஞ்
சிறக்கும் பொற்கம லத்தலர் குவியுமோ சிறிதும்.

பகுத மன்மியே மற்றுள தொழில்களிற் பற்றூர்
தகுதி யாகிய மேலவர் நெறியிலே சரிப்பர்
மிகுதி யானிறைந் தசைவற மூளத்திணன் மிகுவர்
தொகுதி யானநட் பருண்முதற் குணங்களாற் சுடர்வார். 2

இயற்கை யாகிய குணத்தின ரிழிவுயர் விரண்டு
நயக்க லாதவர் சமமுளோர் நன்னெறி நடப்போர்
வியக்கு மாறுதன் கரைகடா வேலையை யொப்போர்
மயக்கி லாதவ ரிரவிபோ னியதியை வழாதோர். 3

கொள்ளற் பாலது துயரிலா தவர்நிலை குறுகத்
தள்ளற பாலது தீயவா நெறியெனுஞ் சழக்கே
யெள்ளற் பாலதா முலகமே தியாமெவ னென்றே
தெள்ளற் பாலது குரவரா லறிவிறற் றீர. 4

வருந்து கிற்பது தனையறி நெறியிலே மருத்தாற்
றிருந்து கிற்பது கருமத்தி லழுந்திலாச் செய்கை
பொருந்து கிற்பது தீயவ ரல்லவர் புணர்ச்சி
யருந்து கிற்பது நானென்ப தாக்குகிற் பதுவே. 5

தீர்க்கத் தக்கது நாம்பெலும் பெனுமுடற் றியக்கம்
பார்க்கத் தக்கது முழுதுயிர்க் குள்ளுறை பரம
மீர்க்கத் தக்கதே நிரவியி னிடத்திலும் பாரி
னீக்கத் தக்கிலாப் புழுவினுரு சிததொன்றே நிற்கும். 6

தாம தத்துட னிராசதஞ் சாத்திக மென்னு
நாம முக்குணப் பிறவியு முயற்சியா னண்ணுஞ்
சேம முததியைச் செய்திடுஞ சாத்திகச் செய்கை
யிராம வுததம ராகவ வென்றுமீட் டுரைப்பான். 7

4. திதிப் பிரகரணம் முற்றிற்று.

ஆக விருத்தம்—766.

5. உபசாந்திப் பிரகரணம்.

5—1. சங்க ராசன் கதை.

சார்குருவின் மகனுரைத்த படியேயிவ் வுலகெலாஞ் சொரூப மாகும், விரவியநீள் பிறப்பிறப்பா மிம்மாயை யிராசததா மதத்தை மேவும், புருடார்தரித் திடவற்ருய்த் தாண்சுமக்கு மண்டபமே போல நிற்குந், திரமுளசத் துவகுணத்துன் போல்வார்கள் சதபயந் தீர்ந்து நிற்பார்.

வழுவறுசத் துவகுணத்தோர் தோலுரிக்கு மரவென்ன மாயா பாச, முழுவுவரெல் லாம்பிரம நாமதுவே யென்றெண்ணி காமும் வேறை, முழுதுலகம் வேறென்னு மோகமொழிப் பாய்பிரம மூலத் சித்தி, லெழுவனகற் பனையெல்லாங் கடலிலலை போன்மெய்யர் யில்லை யன்றே.

சோகமிலை மோகமிலை பிறப்பில்லை பிறப்பிறப்பிற் சுழல்வ நில்லை, யேகமென விங்கென்று முள்ளபொரு ளேயுள்ள திரங்க வேண்டா, மூகமுற வருவனபோ வனநினையேயற் றொழ்ந்தனை ளொன்று மில்லா, மாகாசத் துவகுணத்தோ டொருவனை யிட சொல்லா மாற்றி நிற்பாய்.

சமமாகிச் சொரூபத்தே நிலையாகித் திரமதியாய்ச் சாந்த ஞகி யமர்மௌன மெனதியாய் நன்மணிபோற் றெளிந்ததய ரனைத்து தீர்வாய், நிமலமுற நிகழ்காலத் தொழிற்செய்தி யாவையினு நேய மின்றி, நமதெனக்கொள் ளுதல்விடுத லிரண்டுமறத் துன்பமெல நாசஞ் செய்வாய்.

இனிப்பிறவா முடிவான பிறப்பிலே மெய்ஞ்ஞான மெனிதி லுண்டாம், பனிச்சுடர்வெண் ணிலவுலக முத்தமமா மூங்கிலை லாற் படுவ துண்டோ, செகித்தவரின் மேலோராய் நல்லோரா

மித்திராய்த் தெளிந்தோ ராகி, யநித்தமறு முத்தராய் ஞானிகளாங்
குணமெல்லா மவரைச் சேரும். 5

மெதனென்ற சரித்திரதி னவர்தம்மை யுலகெலாம் விரும்புந்
தன்மை, கொத்தொன்று வருமுங்கிற் குழலிசையான் மகிழ்
விலஙகின் கூட்டம் போலு, மித்தன்மை யாவருக்கும் பொதுமை
யிரு லியமபியதா மிதனில் வேரூய்ச், சத்தென்ற வழியிரண்டேழ்
பவந்தீர்ப்ப வர்க்கவற்றைச சாறறக் கேண்மோ. 6

தேசிகன்சொற பிழையாம லநுட்டிக்கிற் பையப்பையத்
தியக்க நீங்கிப், பேசியசென் மத்தாத லடுத்தசில பிறப்பிரு லாதல்
பேரும், மாசறுவிற் பத்திசிறி தணடாகு மநத்தாற்றன் மநநத்
தாலே, யேசறுமா காசபலம வீழ்வதுபோன மெய்ஞ்ஞாந மெளிதி
லுண்டாம். 7

இவவிரண்டி லாகாச பலம்போல மெய்ஞ்ஞாந மியையந்த
தன்மை, செவவியவள் ளான்முன்னோர் கதையாலே யான்செப்பத
திருந்தக் கேட்பாய், தெவவுலகி லாபத்தென் றொன்றுமிலான்
விதாணததேதான் செல்வ மிக்கோ, னவவியமில் விதேகநா டாசாள்
வோன் சநகனெனு மாசர் கோமான். 8

சற்குணததாற் கடலனையான் சக்காத்தா னெனவுலகந்
தாங்கு தீரா, னற்குணஞ்செய் வசந்தரு ணாறுமலர்சூழ் நந்தநதி
னியநது மேவி, தற்குரிய தந்திராகள் புறநிற்பத் தனியருயச் சரிக்
கும் வேலை, சிற்குரிய மநமுடைய சித்தர்கணம பாடுவபண்
செவியிற் கேட்டான். 9

வெறியாருமை பொருப்புறைவோர் விழிப்புலத்தின் மேவாதோ
ஙிளமபு கீத, நெறியார்மன் னவன்கேட்ட படியுரைப்ப நெடியவனே
நினைவிற் கொள்வா, யறிவானு மறிபொருளுநு கூடியகூட் டரவி
லெழு மறிவா நந்தம், பிறியாத வாந்மதத துவத்தெழுந்த
தாமதனைப் பேணல் செய்வாம். 10

காண்பானுங் காண்பனவுங் காட்சியும்வா தனையுடனே கூல விட்டுச், சேண்பாவு காட்சிக்கு முதலொளியா மச்சொரூபஞ் சிந்தை செய்வா, மேண்பாலா மூள்ளதில தெனுமிரண்டி னிடை யெய்தி யிறவி லாதாய், மாண்பான வொளிக்கெல்லா மொளியாமச் சொரூபத்தை மதித்தல் செய்வாம்.

அகமகமென் றனைத்துயிரி னிடத்துமிருந் தாவாத மூரைபடு தாகி, நிகழ்ளியா யாங்மதத் துவமான சொரூபத்தை நினைத்தல் செய்வார், திகழ்தய குகையுறையுந் தேவதையை விட்டயலே தெய்வந் தேடன், மிகவரிய வெளத்துபத்தை யெறிந்துசிறு மணி தேடும் வேட்கை போலாம்.

மாளாத காதலெனும் வற்சாரா பிக்கொடியின் வாத்தைச் சுட்டு, நீளாசை யனைத்துமறுத் தவர்க்கன்றே விப்பயன்று னேயு நிற்குங், கோளான பொருளனைத்தின் மூன்பொடுபின் பினைமை யிலாக் குற்றங் கண்டு, மீளாத பாவனையாற் கட்டுண்டோர் தெளிவுறுவே வேறென்றன் றன்றால்.

எழுந்தெழுந்து சிறுகின்ற விந்திரியப் பாம்புகளை யிதயத் தன்னி, லழுந்துவிவே கத்தடியால் வச்சிரங்கொண் டடித்திரன்வெற் படர்வ தென்ன, விழுந்திடமோ துறவேண்டுந் சாந்தியிலந் சமமேவி யிடர்தீர் நெஞ்ச, முழுந்துசுக வடிவாந்தற் பதநிலையைப் பெறுமிதுவே முத்தி யென்ன.

தெளிவுடைய சித்தர்கணங் திகழ்வுறப்பா டியகீதந் தெளியக் கேட்டுக், களிதருவெஞ் சினக்கருட னெலிகேட்ட பாம்பென்னக் கலங்கி மன்னன், குளிர்பொழினின் றகமடைந்தா னனைவரையும் விடைகொடுத்துக் கோயில் புக்கா, னளிர்சுதைசெய் மேனிலத்தி லொருவனே யிருந்தாராய் தொடங்கு மற்றான்.

பறக்கின்ற பறவைகளின் சிறகென்ன வாகாதம் பதைத்து வாவி, யிறக்கின்ற வுலகாடை சோக்கிவாய் விட்டிரங்கி யியம்ப

லுற்ரு, னறக்கன்றி யவத்திலுழன் றலமருமிவ் வுலகிடையா னந்தோ வந்தோ, நிறக்கின்ற மயக்கத்தாற் கல்லிடைகற் போலு ருண்டு நொரிந்தே னந்தோ. 16

காலமொரு கான்முடியா நிதனிடையெண் ணூரூண்டோர் கணமு மில்லை, சாலவிது தனமதித்து வன்காத லிடைவீழ்ந்து தளர்வ தேனுன், றூலமதி யாற்கெட்ட வெனைப்போல வீனார் சொல்லற் பாற்ரே, சீலமறு வாணுளைப் பெரிதாக நினைவதே சீசீ யந்தோ. 17

எல்லையிலா வண்டத்தி லியாளுளும் புவிநோக்கி லிறையு மில்லை, யல்லலுறு மிதுபெரிதா வாதரித்து நிற்பதே யந்தோ வந்தோ, புல்லிமையற் றினிதாகி யுதாரமாச் செயப்படாப் பொருளீ தென்னத், தொல்லுலகி லொருபொருளு நவ காணெனித் தொடர்ச நிலை யென்னே யென்னே. 18

தலைவர்தலை மேலுறைவோர் காட்களிறும் ரூழ்ந்தோர்க்குத் தாழ வீழ்வர், நிலையில்பெரு மையையுறுதி நினைக்கின்ற நெஞ்சே யின் னினைவீ தென்னே, தொலைவில்பெரும் போகநுகள் பெரி யோர்கள் நிலையோடுந் தோன்றித் தோன்றி, யுலைவுறமான் டார் மூன்ரு ளிந்நாளிங் நிலையனைத்தி லுறுதி யென்னே. 19

மண்ணுடு மன்னவரு மவர்தம்மு மாண்டனநுண் மணலை யொக்கும் விண்ணுடு மிந்திரரு மவர்வாழ்வும் போயினவின் மீனை யொக்கு மெண்ணுடும் பிரமருமண் டமும்பூதங் களுமிறந்த வெல்லை யில்லைக் கண்ணுடு மவையெங்கே நின்வாழ்க்கை நிலையென்னே கவலு நெஞ் சே. 20

செல்லாத மானையயிரு ளிரவிலே தேகமயத் தியக்க மான, பொல்லாத நீள்கங்வார்ந் சூனியத்தி லிச்சையிறை பூண்டே னென்னிற், கல்லாத புல்லியனேன் சீசிநா ணாவதங் காணு நாட்க,

ளெல்லாம்போ யினபோமா லிறவாதான் ரூய்நன்ரு மெழினு காணேன்.

நடுவின்முடி வினிலடியி னன்ரூன பொருளொன்று ஞால் தில்லேப், படுபொருளெல் லாமிறப்பா மலத்திரு லேபூசப் பட் தன்ரே, கடுவினைக ணூடோறுங் காய்துயர நாடோறுங் கனை யொன் றில்லாக், கொடுமைகளே நாடோறுஞ் செய்கின்ரு ரறிவில் லார் ரூரம்பைக் கூத்தால்.

பாலகனை யஞ்ஞாநத் தழுந்துவனற் காளையாய்ப் பாவை மாராற், சாலவருந் துவன்விருத்தன் ரூனகிக் குடும்பத்தாற் றளர்ந்து சாவ, னேலவிவ னெக்காலத் தென்செய்வான் மாயக்கூத் திருந்த வாறே, ஞாலமெலா மாடரங்காய்ப் பொறிமேள மாய்மறப் பேய் நடிக்கு மன்றே. 2

உள்ளத்தின் முடிமேலே யில்லாமை வீற்றிருக்கு முவகை லென்றுந், தெள்ளநற்ற நல்லறத்தின் சிரத்திலே யெப்பொழுதுந் தீமை வாழு, மெள்ளற்ற வின்பதத்தின் றலைமேலே துன்பங்க ளிருக்கு மென்ரூற், கொள்ளத்தக் கனவான குற்றமிலாப் பொரு ளெனது குறிப்பு னேற்கே. 2

ரிப்பதுவு மிமைப்பதுவுஞ் சகத்தோற்ற மொடுக்கமா மேலோ ருண்டாற், பழிப்பரிய வண்ரூர்முன் னென்போல்வா ரென்னென்று பகரலாவ, ரிழிப்பரிய விசித்திரமாஞ் சம்பத்து மாபத்தா மிதயங் காயி, லொழிப்பரிய விசித்திரமா மாபத்துஞ் சம்பத்தா முள்ளம் வெண்டில். 25

வெம்மாய வாழ்வன்ரே தூயர்க்கெல்லாம் பிறப்பிடமாய விளம்பு கின்ற, தம்மாவிங் கிதனிடையே யழுந்தாமவர்க் கின்பமுள காவ தெங்ஙன், மைம்மாயை யென்னுமரம் பணையிலேபூ காய்பழுத் தால் வரம்பற் ரூங்க, விம்மால்செய் மந்திரவா னிம்மரத்தான் சங்கற்ப மென்ப தாகும். 26

சங்கறப ராசத்தா லெளிதாக மராசந் தானே யெய்து, மங்குற்ற மமமிறக்கிற சமமர ணைங்களெனு மாழு மாயு, மிங்கிப்பா லெனைததிருடுங் கள்ளனைக்கண் டேனகணேடு னிவன்போர் நெஞ்சம, பொங்குறற நெஞ்சத்தா னெதிராவணை தேனின்று பொன்று விப்பேன். 27

இத்தனைதான் மதமுதனைதத் துளைததிலே னின்றுதுளைத் தியைதத நூலாற, சிததிரமாயக் கோததணிவன் முழுதுணர்ந்த தேசிகராற் றெளிநதே னெல்லாஞ், சுததபர மாநதந் தோறறு விக்கு நல்லறிவாஞ் சோதி பெற்றேன, மெததவிவ ரெனனதிங கிவையெனும்பொய் யுள்ளொழிததேன மீணடு நாடேன். 28

பேதிக்கு மதமென்னும் பெரும்பகையை முழுவலியாற் பிளந்து வென்றேன, வாதிதத துயரெல்லா மாற்றினே னுபசாந்த வாழ்வு பெற்றேன், சாதிதத விவேகமே யுனைவணைங்கி னேனென்று சங்கர் கோமான், சேதிதத மதவலிவெல் லாமொழிதது தானேசித திரம்போ னின்றான். 29

வாள்ராசித் திரம்போல நெடிதிருந்து சங்கர்பிரான் மாய்த்து நெஞ்சை, மீள்ராதல் னுபசாந்த நிறைநெஞ்சா னுலகியல்பை மேவிப் பாாத்தான், ரூள்ராணமை யாலியற்றுமை பொருளேது கைக்கொள் ளத் தக்க தேது, கோள்ரான கற்பனையென் சுபாவவறி வாமெ னக்குக் குறிக்குங காலே. 30

சுத்தமாய்ச் சொரூபமா மென்னுருவ லாள்வேறு தோன்றக் காணேன், வதியான் வாராத பொருண்யவேன் வந்தபொரு ளனைத்துங் தள்ளே, னித்தமாய்த் தன்னிலையி னிற்குமென தறி வுருவி னிலையா நிற்பே, னுத்தவர் நேதுவரு மதுவருக வென் றழைந்தி யொருவமும் யாரு ணீ. 31

வானேகு கதிரிரவி காளியற்றும் வாறென்ன வக்து வாது தானேதோன் றியதொழிலப் பற்றின்றிச் செய்தமெனக் சாக னெண்ணிக், தீனேய வருகாலுஞ் செல்கால மிலையளவுஞ் சிக்ை செய்யா, னுானேறு நிகழ்காலத் தோரிமைப்பி னைகதேலா நெரா லுற்றான்.

பேசியதன் விசாரத்தாற் சாகர்பிரான் பெரும்பேறு யபற தல்லால், வாசியுள மற்றென்றல் வந்ததல்ல வாரீச மலர்க்கை மாலே, யாசிலதாய்ச் செவ்வியதாய்த் தனதான விசாரத்தா லடை தல்லாற், றேசிகரில் லாவீனர் செய்தொழிலாற் பெறலாமோ சிற்சொரூபம்.

புறப்பேறு கனவேண்டி யியற்றுகின்ற புண்ணியத்தை புகியி லுள்ளோர், சிறப்பான நல்லறிவு மிகவேண்டு மென்றறுதி செய்யிற் பேறு, மிறப்பான வாபத்து விளைநிலமா யிருந்ததிய வேலை யாகிப், பிறப்பான நச்சுமர மித்தாகும் பேதைமையை பினக்கல் வேண்டும்.

இலங்கியசிந் தாமணியா மிதயமெனுஞ் சாக்கறையி லிருக்கு போதாங், கலங்கலிலா விவேகியர்க்குக் கருதுபொருள் கற்பகம்போ கணைத்தி னல்குக், கலங்குவிசா ரம்படைத்துப் பேதைமைபோய் நல்லறிவு தோன்றி ணைை, விலங்குகவ சத்தோணை யம்புகள்போற் காமாதி விகற்பங் தாக்கா. 35

பரமாதித் தனைமறைத்துக் கறுத்தறிவற் றக்களிதது படர்ந்து மீண்டு, நிரமான வகங்கார மூகில்விவே கக்காற்றா சிதறிப் போகும், வரமான பதம்வேண்டிற் றன்மாத்தி ரைசமுதன் மாற்ற வேண்டு, மூரமான புலியைமுத லுழுதன்றோ விளைபயன்க ளாதலின் றாே.

5—1. சங்க ராசன் கதை மூற்றிற்று

ஆக விருத்தம்—802.

5—2. புண்ணிய பாவநர் கதை.

மோக வற்சரா பிக்கொடி மூளத்தெழு மூலஞ்
சோக மாசுண மிருந்தர சாள்வதோர் சூழ
லாக மேழுத லியாளனைக் காணுமஞ் ஞாக
மேக மாகிய பாராபரந் தோன்றிரு லிறக்கும். 1

அநித்த மிசசக மென்பதை நாடொறு மகத்தி
னுனித்து நோக்கினர் சாகனைப் போலநுண் ணறிவாற்
றனித்த மெய்ப்பொருள் பக்குவ தறிகுவர் தநத்தால்
மனித்த ராற்கரு மத்திரூற் றேறவால் வாரா. 2

சாந மஞ்சினர்க் கவருடை முயற்சியே சாரைந்
திநமு மிகுகிவ ரூனைனுஞ் சிறுமைதான் சிதையி
லாக மாயுல கெங்குமாம் விசாலமுண் டாகு
மாநு றதனை துயர்ச்சிதான் காணபுற வருமால். 3

வேறு.

பற்றுவீ டென்றி ரண்டிற் பற்றலும் விடுத ரூனு
மூற்றவை மநத்து ரூப முயர்பந்த மதுவே நில்லை
மூற்றுறு பற்று வீட்டின் மோகமுந் துயரும் விட்டுத்
தூற்றுள பற்று வீடு துடைதததசை யாது நிற்பாய். 4

மயலின்மை யநித்த மின்மை மடமின்மை வருத்த மின்மை
செயலின்மை கரும மின்மை தியக்கின்மை விகற்ப மின்மை
பயமின்மை துவட்சி யின்மை பகையின்மை குறைவொன் றின்மை
கயமின்மை கடிந மின்மை கடிநமாயக் கழற லின்மை. 5

வீடுபெற் றிரண்டு நீத்த மேலவ ரிடத்து மேவி
நீடுவா தனைக ளின்றி நிகழ்த்திய குணங்க ணிற்கும்

பீடுறு நினைவா னாலாற் பிணிப்புற்றுப் பிறவி யேலை
யூடுற மயன்மீன் வாரு முயர்ந்தவா தனையாஞ் சாலம்.

வாதனை யென்னு மிந்த வலைபுந்தி வாளா லீர்ந்து
மோதுசூ றைக்காற் சிந்து முகிலெனச் சிந்தி நிற்பாய்
பாதவங் குடாரத் தாலே படுப்பபோ னெஞ்ணை சொஞ்சாற்
றீதற மாய்த்து மேலாம் பதத்திலே திரமாய் நிற்பாய்.

வகுதல் வருத றுஞ்சல் விழித்திட லிருத்த னிற்ற
லாகிய வெல்லாம் பொய்யென் றழுந்தியுள் ளாசை தீர்வாய்
சேகுற வலையுஞ் சித்தம் பகுதியாற் சித்தின் பின்னே
போகலூன் மணத்தாற் சிங்கச் தனைத்தொடர் பூனை போலாம்.

மடங்கல்வீ ரியத்தாற் பெற்ற தனைதின்னு மார்ச்சா லம்போற்
றொடர்ந்துசென் மாளுஞ் சித்தாற் றேருன்றிய பொருளைப் பற்று
படர்ந்துகாண் பவற்றைப் பற்றின் மாய்கெடாப் பந்தம் போகாத்
திடங்கொள்காண் பவற்றை நீக்கிற் சித்தம்போய் முத்தி யாகும்.

யானிலை யிரண்டு மில்லென் றெண்ணினீ மேவப்போ னிற்பா
யூனிற மில்லா வின்போ லுளத்தழுய் நல்லு ளத்தே
தானும்லை யழுமாய்க் காண்பான் காண்பன தம்மி னோடே
மேனிகழ் காட்சி யென்னு நின்னைநீ விடாது தேர்வாய்.

இனியன வினிமை கொள்வா னிரண்டும்விட் டிவற்றி னோடே
தனிநிக ழினிமை நாடித் தற்பர மயமாய் நிற்பாய்
நனிபல தூய்ப்பான் றூய்ப்ப திரண்டுக்கு நடுவே தானே
யனிசம்பற் றின்றி நிற்கு மதுபற்றி யதனு னிற்பாய். 11

காதலாற் கட்டி லுய்யார் கயிற்றினாற் கட்டி லுய்வா
ராதலா லாசைக் கட்டை யசங்கற்பத் தறுப்பாய் நானென்
றேறுபா வனையை நானென் றுதறுகார் வாளால் வீட்டி
யேதமில் சுபாவம் பாவித் தெழுபவ மிலாவீ டெய்தி.

அனைத்துயிர்க் கச்ச மில்லா நிலைநிற்பா யதுல வெண்ண
வினைத்தொட ராகம்பா வததின் வேட்கைதீ ரென்ற நின்சொன்
னினைததிடின் மிகவு மாழ நீடகரு கார நாசந்
தனைசசெயி லுடல மென்னு மேதுவைத் தவிாக்கின் றேறுல். 13

அகமென லொழிக்கிற் ருனை யங்கரு மடியி லீர்ந்த
நகமென விறக்கு மன்றே யென்றுயர் நாதன் கூற
மகமுநி யுரைப்பான் வள்ளால் வாதனை மாற்று மாறு
நிகழ்வுறு தேய நேய மிாணடென நினைப்பர் கற்ரோர். 14

இந்தநம் பொருட்கு வாணு ளியாமிவை யெமக்கு வாணு
ணந்துறு மிவறரு லன்றி நாமில்லை நமமா லன்றி
வந்தவிப் பொருள்க ளிலலை யெனுமநத துறுதி மாற்றிப்
புந்தியா லுசாவி யாமும் பொருள்களும் வெவவே றென்றே. 15

பொருளினே மல்ல நாமு நமதல்லப் பொருளு மென்றே
தெருளுநற்றுட் குளிாந்தி யாவும விநோதமாய்ச் செய்யு நெஞ்சான்
மருளறு நிச்ச யத்தால் வாதனை விடுத ருனை
யருள்பொழி மேக மொப்பாய் தேயமென் றறிவா யன்றே. 16

தனதுவா தனைமாண் டெல்லாஞ் சமமதா நெஞ்சாற் பண்ணி
யெனதென வெ துடலை நீகதி னிந்தவா சனைநா சந்தா
னநகமா நேய மாகு மகங்கர மயம தான
வினவுவா தனையை முற்றும் விநோதமாய் விட்டோர் மேலோர். 17

தீரா மவரே தேயத் தியாகருசெய் சீவந் முத்தர்
வேரறத் தொழில்க ளோடே வாதனை விட்டுள் ளாறித்
தாரமா நேயம் விட்டோர் துகளறு முத்த ராகும்
வீரனே யிவையி ரண்டின் விடுதியுந் தம்மி லொக்கும். 18

வேறு.

தேய நேயத்தின் றியாகங்கண் முத்தர்பாற் செறிவ
தேய நேயத்தின் றியாகங்கள் பிரமத்தைச் சேர்த

தேய நேரயத்தின் றியாகங்க ளிடரெலாந் தீர்ந்த
தேய நேரயத்தின் றியாகங்கள் தேடருஞ் செல்வம்.

வேறு.

சூழுறு மின்ப தன்பந் தொடர்வுறி லொருகா லத்து
மாழுதன் மிதத்த வில்லா வவர்களே சீவந் முக்தர்
கேழுயர் மகிழ்ச்சி யச்சஞ் சினமின்மை பொருமை கேத
மூழுறு மிவற்றை நோக்கா வுளத்தினர் சீவந் முக்தர்.

சுழுத்திபோ லாறி நின்ற பாயனைத் தொழிலி னலே
பழுத்தவொரு சதரை னீங்காச் சாக்கிரம் பயில்வோர் நாளும்
விழுத்தகு கலைகள் சூழ்ந்த மதியென மேலோர் மேவ
மூழுத்தமும் பிரிவி லோரே முத்தரென் றுரைக்கத் தக்கோர். 21

யுறப்பொருன் விட்டா லுள்ளே பூண்டமா லென்று சொல்வர்
மறப்பற வனைத்தும் விட்டான் மாண்டமா லென்று சொல்வர்
திறப்பட வெனக்கே தாக வென்றெழுந் சிந்தை யாசை [மும்,
துறப்பில்பொன் விலங்கா மித்தைத் துவக்கறத் துடைத்தல் வேண்

சத்தசத் தென்னப் பட்ட சகலபா வனையி லென்றுங்
கொத்தற வாசை மாற்றிக் குறைவில்பே ருளத்த ரெகிச்
சுத்தால் லுதார மான சொரூபத்தி னிற்பாய் பெத்த
முத்தமா மாசை யின்ப துன்பங்கண் முழுது நீக்கி. 23

பேதமுந் திரையு மில்லாப் பெருங்கடல் போல நிற்பாய்
மானவ கேண்மற் றொன்று மாசிலா விசார மூள்ளோர்க்
கானநிச் சயமா லுண்டா மடிதலே மட்டு நானே
யீனலுற் றவர்தாய் தந்தை யென்பதோ ரறுதி தானே. 24

கன்றிய பந்த மாகு மிதுமெய்ம்மை கருதா வாற்ற
னின்றன வனைத்தின் மேலோ னெல்லின்வா லிலுஞ்சற் றோரா

னென்றிரண் டாவ தான நிச்சய மெய்து மென்னி
லொன்றிய முத்தி யுண்டா முத்தமர்க் குடைமை யாகும். 25

புவியெலா மெனது ரூபம் பொன்றுத லிலரு னென்று
குவிவறக் காண்டன் மூன்று நிச்சயங குறைவில் வீடா
மவியுறு முலகு நானு மனைத்தும்பொய் விண்போ லென்றுந்
தவிாகில மென்ற ரூலா நிசசயந தனிவீ டாகும். 26

பெததவா சையதா முன்னே பேசுநிச் சயம தொன்றுஞ்
சுததவா சைகளா லூனறு நொயயவாயத துகளில சீவந
முதகர்பால் விளஙகு மிந்த மூனறினு ளெலலா நானென்
றுதகதேதா நிச்ச யததைத யுறிற்பின்னே யுள்ளஞ் சோரா. 27

சூனியம் பகுதி மாயை பிரமருசிற் சோதி ரூந
மீனமில் புருட ரூம்மா வீசானன சிவமே நிதத
மானவை யெனன லாமொன றிரணடெனு மகல்பே தத்தால்
வானுயர் சகமப டைக்கும விநோததத்தால வளரு மொன்றே. 28

ஒன்றெனும் பாம ரூபத தொருசததி யொருமை யாலே
னினறெழு கின்ற தன்றே னின்னது பிறர தென்றும்
பொனறிய திருந்த தென்றும பொருள்களிற் கருமந் தன்னி
லென்றுமின் பதது ண் பஙக ளிதயதது லூன்ற வேணடாம. 29

யாதினு முயர்ந்து மாளாப் பதம்பறறி யிதய மென்றுஞ்
சீதமா யின்பத் துண்பஞ் சோகிலா பிறப்பிற் சோரார்
சாதுகொள் பகைகொ ளொதத்தல் தருசமவல் லபஙக ளுள்ளே
ரோதிய நெறியிற செல்லு முத்தமா பிறப்பிற் சேர்ார். 30

இழிவுயர் விரண்டு மெண்ணு ரிச்சைசே கா பஙக ளெய்தார்
தொழிலிரு ழி லிலாமை விட்டோர் துன்னிய பிறப்பிற் சேரார்
மொழில்பெற விளங்கி யார்க்கு மினியன வினிதிற் சொல்வோ
மழிபொரு ளினத்தின் சால்பை யறிந்துளோர் பிறப்பிற் சேரார். 31

வேறு.

தேயவா தனைநீங்கிப் பூர்ண மாகித் தெளிந்தவிழி யிமையாமற்
சிவந் முத்தி, யாயபா வனையாலே சொரூப மேவி யநவாத முலகிவ்
விளை யாடு வீரா, மாயவா சையைநீக்கிப் பற்ற றுத்து வாதனைபோ
யுள்வெளியாய் வாகி யத்தே, மேயவா சாரமெலா மியற்
யென்றும் வேண்டியவா றுலகில்விளை யாடு வீரா.

சகத்திலே புறத்தொழிலி லாரம் பித்துத் தனியிதயத் தாரப்
பஞ் சற்று மின்றி, யகத்திலே செயாதோ ணெய்ப்புறத்தே செய்வோ
ருகியே யுலகில்விளை யாடு வீரா, யுருத்தவுகங் காரம்போய்ச் சித்தம்
தெறி வாரம்போ லெய்தாகி மாசொன் றற்று, வெகுத்துவமா
மடையாள மனைத்து மின்றி வேண்டியவா றுலகில்விளை யாடு வீரா

இதமான வுதாரியாய்க் கடிநா சார மின்றியா சாரங்கட
கெளிது பின்போய், விதமான வனைத்துக்குஞ் சார்பை நோக்கி
வேண்டியவா றுலகில்விளை யாடு வீரா, புதலுகி நிராசைதனை
யுள்ளே தேக்கிப் புறத்தேயா சையிற்றொழில்கள் பூண்டான்
போலா, யதலுலட் சினமாய்ப் புறம்வெய் தாகி யநவாத முலகில்
விளை யாடு வீரா.

இவன்சுற்ற னிவன்பகைவ னிவரு னென்னு மிவ்வெறும்
பொய் யிராமநீ யிறையு மெண்ணே, லவம்பற்று நொய்யமந்த் தவர்க்
கிவ் வாறு மறிந்தோர்க்குச் சகமுழுது மகலாச் சுற்ற, நிவர்த்தற்
பலகோடி பவமோ கத்தா னீபகைநீ யுறவென்பா நிமிடந் தோறு,
முவந்தற்ற மயக்கிதுவாம் பரமார்த் தத்தா லுலகெல்லாம் பக
யாகு முறவு மாகும்.

இதுபொருட்டா லிதிகாச முமன்று கேள்பண் டிடையந்தகன்
கையின்கணைய் னிருடி மைந்த, ரதுலமயேந் திரகிரியி. னையலே
வாழ்வோர் பருந்தவத்தோர் தீர்க்கதவ னளிக்க வந்தோர், சதுர்மறை
தேர் புண்ணியபா வன்சொன் முள்ளார் தம்கையொடு கங்கையின்பாற்

றவஞ்செய் நாளிற், பொதுவுறச்செய தவப்பயனுற் கால முற்றிப் புண்ணியனும் புண்ணியவான் போதம பெற்றனை. 36

அகவன்பின் னவனுன பாவ னன்பா லறிவுடைமை பாதியள வாத லாலே, செகதிரோ ஹுதிப்பதன்முன் னருணன் ரூன்றச செங்கமலங கிணகிணிவாயச் செய்வ தொத்துத், துகவறி யாமையு மெய் வீடு மின்றித் தோளாவெந் திரம்போலத துவண்டு நின்றான்; பொங்குதவத தீர்க்கதவ னென்னுந் தந்தை போகதி லிச்சை யெலாம் புந்தி தோந்தான். 37

காலமே காரணமாய்க் குடும்ப வாழ்விற் காதலொழித் தறச் செறிந்த காயந் தன்னைச், சாலமிகு தொழிற்பறவைக் கிடமாங் கூட்டைச் சாந்வியின் கலைகளையிற் ரூனை தோந்தான், கோலி யொரு சுமைசுமப்பான் குறித்த வெலலை கொண்டுபோய்ப் போடுவ போற குரம்பைப் போட்டு, மாலுறுபற் ரூன்றின்றிப் பூவி லுற்றம் வானுறல்போற் பரமபத வாழ்வு பெற்றான். 38

தொழிலின்றிக் காட்சியெனுந் துன்ப மின்றித் தொல்லறிவு தோன்றிடமாஞ் சொரூபம் பெறற, வழிவின்மூனி யிறதலுமே யவன்றன் பன்னி யம்புயனின் றகலளிபோ லங்கம் விட்டாள், விழிகணிகா தாயதனதை யிறப்பக் கண்டு மேற்செயவேண் டியகிரி யை விதியிற் செய்வான், வழிபடுபுண் ணியன்முயனரூன் யாவன் ரூனும் வருதகமெனுங கடற்புகுந்து மயங்க லுறரூன். 39

அன்னேயன் னேயென்னு மென்னே யீன்ற கையானை யாவென்னு மந்தோ வந்தோ, வென்னேயென் னேயென்னு மாற்ரு லகி யெரிமிதித்தாற் போற்காக மெகுகு மோடுந், தன்னே ரின் முன்னவனே நோக்கித தோரூன் றம்பிமிகத் தளாவுற்ரூன் றனரா முன்னேனை, யின்னேரு மூடற்கிறத்த லியல்பே யென்று வேறெரூன்று நினையாமல் விதியே செய்தான். 40

மறைநெறிகண் முடித்ததற்பின் சோகத் தாலே வாய்மூட
விளவறனே வந்து சார்ந்து, நிறையறிவாம் புண்ணியன்பா வனை
நோக்கி நெஞ்சழிக்குந் துயரமைந்தா கீத்த லென்னை, பொரு
மிகுநின் பிதாநின்ன தன்னையோடும் பொருந்தியிருந் துளபுதத்தின்
பொலிவைக் கேளாய், குறைவுநிறை வில்லதென்றுந் தனதாய்
தாளைக் கோதிலதாம் வீடெனும்போர் கூற வற்றும். 41

அனைவருக்கு மேவுமிட மதுவே யாகு மறிஞருக்கு மெய்யுரு
மதுவே யாகுந், தனையகலா வப்பதத்தில் வாழுந் தாதை தனைநோக்
கித் தளருமது தகவோ தம்பி, தனைபுனலி னெட்டடத்துக் கெய்தும்
பள்ளத் தொகுதிபோற் பிறவிதொறுந் தொடர்ப்பாய்ப் போன,
வனையுறுநின் ரூய்தந்தைக் கிலக்க மூண்டோ மனைமக்கள் சுற்ற
மொரு மட்டுண் டாமோ. 42

பருவங்க டொறும்பெரிய வாத்திற் காய்க்கும் பலங்கள்போற்
பலங்கடொறும் பாந்த சுற்றங், கருதுங்கா லிறந்தவவர்க் கிரங்க
வேண்டிற் கற்பமள வலறினைமோர் கையுண் டாமோ, சொரும்
மிலா வஞ்ஞாகக் காகன் மேட்டிற் றொடர்ந்தவா தனைக்கோடைச்
சுழல்வெங் காதம், பெருகுநீர் சுகாசுகமாந் திரைகண் மோதிப் பேத
மொரு கையின்றிப் பிறழு மன்றே. 43

இல்லுறவு பகைகேயங் கோப மாசை யிழிவுயர்வா தியள்வடிவ
யெழுந்த ஞாலம், புல்லுறுதன் ஞமமாத் திரத்தி னுலே பொலிந்து
விரி கின்றதல்லாற் புறனி லுண்டோ, நல்லுறவா னினைத்திடினல்
லுறவே யாவர் நண்ணுராய்ப் பாவிக்கி னண்ணு ராவர், கொல்லுற
நஞ் சமுதாண்டின் குணங்கள் போலுங் குறித்திடுபோ வனைக்கட்டுக்
குலைந்தா லுண்டோ. 44

ஒன்றிலே தொன்றியனைத் துருவ மான வுணர்வுக்குப் பகை
யுறவென் றுரைப்ப தெங்ஙை, னின்றியொழி நசைபுண்ணீர் தொல்
கன் மேய்ந்த வெலுப்புப்பஞ் சாந்தன்னி லியாமா வென்னு, நின்றி

வணீ நின்மகத்தா னினைத்து நோக்காய் நிமலமாம் பாமவிழி நெறியா
ணேக்கிற், பொன்றுதுயர் நீயில்லை நாணு மில்லைப் புண்ணியபா
வமெனனல்பொயப் போதந் தோன்றும். 45

எகியதீ வுகடோறும் பிறந்த சென்ம மெண்ணவொண்ணு
விந்நாவற் பெருந்தீ வததிற், நோகிலமாய் முன்பிறந்தாய் விலங்கு
மேகங் குன்றுமா மூவகபுட் குலங்க டமமிற், போகியசென்
மதனதாகுதி புகல வொணணுப் பொருந்துமவற் றுன்கிளையாய்ப்
போனாக் கெல்லா, மாகுலமுற் றிலையென்னீ யவற்றின் மட்டோ
வந்தநே சப்பிறவி யறையக் கேளாய. 46

கோசலத்துங் தெசார்ணவத்தும் பௌண்ட ரத்துங் குச்சரத்
துந் துழாரத்துங் கோக நத்தும், போசலத்து மேகையத்துஞ் சாரு
வதத்தும் பூபதியாய் வாநரமாயப் புழுவாயப் புல்வாய், மாசலத்திற்
கரணடமாயப் பதங்க மாகி மாசுணமாய் வேசரியாய் மட்டில்
சென்ம, நீசகல வாதனையாற பிறநத போதி னின்கிளைஞர்க் கிரங்
காத நீதி யென்னை. 47

அளவிறந்த பிறவிதொறும் பிறந்தோர்க் கெல்லா மன்னதா
தையையெண்ணி லகன்ற காநிற், கிளர்மாகக டருஞ்சருகை
யெண்ண வற்றுங கேதமுறக் கணக்கில்லைக் கேளாய் மைந்தா,
தளாவினறிப் பாவாபா வனைக ளின்றிச் சராமரண மற்றவுனைச்
சங்கி யாதே, யுளமுறநோக் காய்துயர்விட் டருஞாநத்தை யொழித்
லுள்ளபடி யுன்னைக் காண்டி. 48

உன்னுருவை நீகாணு ஞாநக் கண்ணி லொன்றலா வாசை
யெனுங காச மூறு, மன்னதுதீர்த் துளக்கமலத் துள்ளே நொய்ய
வறிவுடைய வுண்மநத்தா லுன்னு லுன்னை, யின்னபடி யென
நோக்கி முயக்க மெல்லா மிறையுமற வொழித்தின்ப மெய்தி

நிற்பாய், பின்னவனே யெனமுன்னே னுலைத்தா னென்று பெரி தனைகக்கு வசிட்டமுனி சேபி னனே.

5—2. புண்ணிய பாவஞ் கதை முற்றிற்று.

ஆக விருத்தம்—851.

5—3. மாவலி கதை.

புண்ணிய னுலைத்த ஞானம் பொலிந்தபா வனன்ற னுள்ள
நண்ணிய விடியற் கண்ட ஞாலம்போல் விளங்கித் தோன்றத்
திண்ணிய விருவர் தாமுஞ் சித்தராய் விவேக ஞான
தெண்ணிய கடைாயை யெய்தி யியம்பிய வாசத் திருந்தார்.

வேண்டிய கால மெல்லாம் விநோதமாம் விளையாட் டெய்தி
யீண்டிய காலஞ் செல்ல யாக்கைதீர் வீட்டி லெய்தித்
தூண்டிடு திரிநெய் யில்லாச் சுடர்கள்போற் சாந்த மூற்றூர்
மாண்டிடு முயிர்கட் கெல்லா மாபின்ற மாபு போலாம்.

அநந்தமாம் பிறப்புற் றூருக் ககிலமு மயலண் ணுகிற்
சினந்திட னையத்தல் வேண்டா வாதலாற் செறிந்த வாசைக்
கநந்தனை விடுவ தல்லாற் கதித்துற வளர்க்க லாகா
மநந்தனில் வளர்க்கிற் சிந்தை வஞ்சிக்கு விறகா மன்றே.

இச்சையாம் விறகு மாண்டா லெண்ணமாம் வஞ்சி மாளு
நிச்சய மாகுந் தேயத் தியாகமா நெடுந்தே சேறி
மெச்சிய வுதாரக் கண்ணுல் வேட்கையான் மிகவும் வாடுங்
கொச்சைசெஞ் சாலத்தை சோக்கிக் குறைவற விருப்பாய் தீரா.

வேறு.

கொய்ய தாயொரு மயலின்றி சோயலா சீங்கி
மெய்ய தாகிய பிரமமா நிலையிது வீரா

ணைய மின்றியிந் நிலையுறி லறிவில ரோணு
ணையன் மேவல ரிராமநீ யிவ்வகை வாழ்வாய். 5

நல்ல புந்தியும் விவேகமு மெனவிரு நண்பா
லல்ல நீர்ந்திடு மொருவரை யென்னினு மணுகிற்
சொல்லு பல்பொருட் சுற்றங்க டுடக்கறத் தீர்ந்து
புல்லு தின்மையி னலன்றித் துயரெலாம் போகா. 6

மயலி லாமையா னூல்களான் மகத்துவ மூதலா
மூயர்கு ணங்களால் வருந்தியு மநதநினை யுய்க்கிற்
றாயாக ணீங்குழு வுலகுறு செல்வமுந் தொக்குப்
பயன ளிக்கினு முயர்வுறு மநமெனப் பயிலா. 7

மநநி றைந்திடி லமுதமாய் நிறைந்திடும ணையங்
தனது தாட்செருப் புலகெலாந தோன்முச்சுந் தாம்போற்
கநநி ராணசையா னிறையுநெஞ சாசையிற கவிழா
திநமு மாசையா னிறைமநங குறைவென்றுந் தீரா. 8

அகத்தி யன்கவர் கடலென நன்னெஞ்சை யழிக்கு
மிகுத்த மாலிலா மநமென நிறைமதி விளங்காப்
பகுத்த பாற்கட னிறைவுறுப் பரிமளக் கோக
னகததி னுயகி திருமுக நலம்பெறத் தோனறு. 9

மதியை மேகம்போல் வெண்டலச சுதையினை மைபோ
லதிக நன்னெஞ்சை யாசையாம் பேயழ கழிக்கும
பொதியு மாலெலா நீக்கிவன் பவப்பயம் போக்கி
முதிர்ம நத்தின்மால் பிணிப்பறின முததிவே றுளதோ. 10

இன்ன தன்றெனி லிராகவ மாபலி யென்ன
நன்ன தாகிய புநதியான் ஞாநமே நேர்வா
யன்ன தேநல னெனன்றலு மனையதே தென்று
சொான்ன மாமுநி தன்னையே யிராமனுஞ் சொான்னான். 11

வினைய வள்ளலுக் கருந்தவ னுதித்தாம் வினம்புக்
கனைத தோள்களா லுலகெலா மஞ்சுறச் சயித்தோன்
பிரானி சார்ங்கியை முதலினர் தாழ்வுறப் பொரியோ
னரானி யாமெனப் பாதலத் தரசுசெய் யதுலன்.

மாவ லிப்பெய ராணுயர் விரோசனன் மைந்த
னவ லிப்புறு கோடிபத் தாண்டடா சாரேண்
காவ லிற்றிகழ் மேருவின் சிரமணி கதுவு
மேவ லிற்பொலி சாளரா மேனில மேவி.

ஒருப கற்றனி யிருந்தன னினையினை யுணர்ந்தான்
பெருகு போகங்கண் முனிந்தனன் பிறவினை நினைந்தான்
பொருவின் மூவுல கங்களிற் போகங்க ணெடுநாட்
பருக நல்குநம் போரா சாவலன்கொல் பயனே.

எய்து போதினி லினியவா யெக்கனே யெனிலு
நொய்தி னீங்குமிப் போகத்தி னின்பமே நுவலி
னெய்த லேக்கிய நின்பமு நெருநல்போ வின்றுஞ்
செய்த செய்வதே யல்லது கண்டிலந் செயல்கள். 15

உண்ட வின்பமே மீளவு முண்கின்ற தொருநாட்
கண்ட காட்சியே மீளவுங் காண்கின்ற துலகந்
கொண்ட கோலமே மீளவுங் கொள்கின்ற தென்றுல்
விண்ட மேலவர் ஞானுரு தொழிலரோ வெறுத்து. 16

அருந்து மட்டினி தென்றதே மீண்டுமீண் டருந்திக்
கிருந்தி டாதபுன் கிறுவர்போற் செயலறி யாது
வருந்து கின்றன நாள்பக்க மாதமாண் டுகங்கள்
பொருந்தி வந்ததே யல்லது புதிதொன்றும் வாரா. 17

செய்யத் தக்கன யாவையுஞ் செய்துமிச் செயலா
லெய்யுப் பெற்றதென் செயன்மறித் திலாததொன் றுவகை

லையப் பாடற யாதிரு லெய்துமப் பொருடான்
மையப் போகத்தா லொழிந்துமேல் வருநெறி யாதே. 18

அழிவி லாததா யந்நிய மாகிய வதுசேர்
வழிய தேதெனச் சிந்திப்பான் மந்தொன்றை நினைந்து
மொழிய லுற்றன னறிந்தன மெனவிரு நொடியில்
விழிபெ ருத்திடப் புருவமே லெறறினன் வியந்தான். 19

தன்ன துள்ளுற நினைததது விளமபினன் ருனே
முன்ன மிங்கியான் கேட்டனன் முழுதுணா முதன்மை
யென்ன ருமபிதா விரோசநன் றன்னையிப் படியே
யனன வன்புகன் றனனென விவையெலா மறைவான். 20

ஐய துன்பமு மின்பமு மென்பன வனைதின்
மைய லியாவையு மடிநததேதா ரிடமெது மநதின்
வெய்ய மோகந்தீ ரிடமெது வேட்கைக ளெல்லாங்
கைய றப்பட்ட விடமெது கருணையா லுரையாய். 21

நீராசை யாகியே யிளைப்பெலா நீங்கிட மேது
விராவு பேரின்பத தழுகிதாய விரிவிட மேது
பராப ரந்தெளிந துணாநதநீ பகாதியென னெஞ்சை
யாவு துன்பம்விட் டிளைபபெலா மாறுதற் கென்றேன்.

ஏந்தை யப்பொழு தரைசெய்வான் மைந்தகே ளியம்ப
வந்த மற்றற விசாலமா யளவற வகன்று
சுந்த ரத்ததாந் தேசமுனை டனைடதின் ருகுதி
வந்து தித்திருந் திறப்பதற் கிடமதாய் வயங்கும். 23

ஆய தேயத்தி லெம்பெரும் பூதமு மில்லைச்
சேய குன்றில்லை வநமில்லைத தீர்த்தங்க ளில்லைத்
தூய தேவரோ முதலிய தொல்லுயி ரில்லை
நாய கன்பெருஞ் சூடொரு மொருவனே நண்ணலும். 24

முழுதுங் காண்பவன் முழுதிலுஞ் செறிபவன் முதல்வன்
பழுதில் சாந்தரைய் நிறைந்தவா ளாவுறை பண்போன்
வழுவி லாவிவ ரைக்கிய மந்திரி வசத்தாற்
றழுவு செய்கைக ளியாவையு நடத்திடுந் தானே. 25

இல்ல துள்ளதா முள்ளது மில்லாதா மிமைப்பிற்
புல்லு மந்திரி நினைதகிடி லிடரென்றும் புகிக்க
வல்ல தில்லையொன் றறிகிலன் மன்னனை விடாது
செல்லுந் தன்மையாற் கேவல மினைத்தையுஞ் செய்யும். 26

இந்த மந்திரி தன்னெதி ரியாவையு மியற்ற
வந்த மனனவ னெனறுமே காந்தத ரைகு
மைந்த வென்றுரைத் தருளிய பிதாவைவான் மகிழ்ந்து
புந்தி யாலந்த வகையெலாம் வினவினேன் புகழ்ந்து. 27

அறிவி லாசமா யாதியும் வியாதியு மின்றி
நிறைவி தானவத் தேசமே தத்தனை நேருந்
திறவி யாதது யாதிரை லெய்துமத் தேசத்
திறவி லாதவம் மன்னர்மந் திரி யாவன். 28

புவந மியாவையும் விநோதத்தா லடர்த்தவென் புயத்தா
லவனம் மந்திரி யுடனடாப் புரூவலி யமர்ந்த
தெவன றைந்தருள் கென்றலு மென்பிதா விசைப்பான்
கவன நீள்வலி மந்திரி வேகமார் கடப்பார். 29

தேவர் தானவ ரென்ணரு கோடிக டானன்று
மேவ வென்றிலா ரூலதே மிகண்முத வென்ற
மேவ ரும்படைக் கலமெலா மவன்மிசை விட்டான்
மாவ ருங்கல்லி லறைந்தபூ வெனமூனை மடியும். 30

விளிவ ருந்திற லந்தமந் திரியந்த வேந்தா
வெளிது வென்றிடில் வணங்குது மிவ்வகை யின்றே

லளிய மேருவை யசைப்பினு மசைப்பரி தாகு
மொளிகொ ளுகபுந் தியினலால் வெலப்படா வெருகுகே. 31

உக புந்தியா லலலதவ வமைச்சினை யுறழுல்
வேக நாகம்போ லெரிததிடும் வேந்தனே டமைச்ச
னேக ராச்சியஞ் செய்யுமத தேசமு மியாவுஞ்
சோக மற்றிடக் கேளென விரித்திது சொன்னன். 32

முன்ன நாஞ்சொன்ன தேசமோ முடிவிலா முத்தி
மன்ன னெனறது மாசிலா மணியென வயங்குந்
தன்னில் வெறிலா வாததும தததுவந் தானே
யன்ன வேந்தனு லமைத்தமந் திரிமர மாகும. 33

கிடைய மியாவையு மொருப்படட வொருக்கிநல் விராக
முடைமை யாவது பாமமாம யூகமென் றுரைதேந
தடையி லாமரும விராகததால் வெலப்பட்ட தன்மை
படைசெய மததமா தொழுவத்து ளகப்பட்ட பணேப. 34

கறற றிந்திலா மநதனைநாற் கூறெனக் கற்பித
துற்ற போகத்தி லுபயழு நால்வழி யொன்றும்
பெற்ற தேசிகன் பூசையி லொன்றுமாயப் பேணித்
றுற்ற கங்குல்போய் விவேகமாரு சுடர்வந்து தோன்றும். 35

சிறித றிந்தவர் மநத்தைநாற் கூறெனச் செய்து
பொறிவ சததொன்று ந தேசிகா பூசையி லிரணடு
மறியு நூறபொருண் மநநதரோர் கூறுமே யாக்கி
னெறிவி வேகததா லொன்றுணர் ஞாநமே நிரம்பும். 36

ஞாந மூற்றவர் மநத்தைநாற் கூறென நாட்டி
யான நூலினும் விராகத்து மநுபவந் தனிலு

மான நற்குரு பூசையின் வ
லீன மற்றவன் மூத்திவர் தெய்திடு மெளிதின்.

வேறு.

மிக்க வறிவால் விசாரத்தான் மெய்ம்மை யுணர்வு நிராசையுநீ
யொக்க வென்றுங் கைக்கொள்வா யூற்ற மான நிராசையிலுற்
றக்க விசாரம் விசாரத்தாற் றவிரா நிராசை தம்மாற்றுந்
தொக்கு நிரம்பும் வாரிதியுந் தொடர்மே கழுந்துன் னுதல்போலாம்.

நாட்டி னியல்பு வழுவாம னட்டோர்க் கிதமா நற்பொருள்க
ளீட்டி முன்ன மதனுலே யினிய குணத்தி லுயர்ந்தோரைக்
கூட்டி யவரா னிராசையினைக் கூடி யதனுல் விசாரத்தைத்
தீட்டி யதனுன் மெய்ஞ்ஞானந் தெளிந்தான் முத்தி சித்திக்கும்.

என்று முன்ன மென்றந்தை யிசைத்தான் றெய்வ சகாயத்தா
லொன்று மொழியா தின்றுணர்ந்தே னுணர்வு பெற்றேன் போக
னின்ற வர்சை யின்றெழுந்து நிராசை யென்னு நிதியாலே [தி
துன்றி நொய்தா யுபசாந்தச் சுகையிற் குளிர்ந்த சுகம்பெற்றேன்.40

அந்தோ வந்தோ விதுநெடுநா ளறிந்தி லேனின் றறிவுற்ற
சந்தோ டந்தை யென்சொல்வேன் சகல நினைவுஞ் சமித்தாறி
னொந்தோ ரின்ப துன்பத்தா லேவா திருக்கு மிடமிதுவே
யுய்ந்தோ ருறையும் பதமிதுவே யுபசாந் தத்தி னுயர்விதுவே. 41

என்ன வுரைத்து காருவொன் னுருவ மேதென் றியான் விளக்க
தன்னை யறியுஞ் சுக்கிரனைத் தாழ்ந்து வினவித் தத்துவத்தை
யுன்னு மொழுதே யஞ்ஞான மோடு மென்ன வுசாவை [பா
முன்ன வேண்டு மெனக்கண்கண் முகிழ்த்து நினைந்தான் முழுதன்

மெய்யா கியசச் சிதானந்த வெளியே வடிவா கியவெள்ளி
யுய்யா நின்ற மாவலிமுன் னுதிய்ய வவனு முவந்திறைஞ்சிக்

கையார் மணியா லுயர்மலாற் காலி லருச்சித் துரைசெய்வா
னையா நின்னன் பெனையெழுப்ப வடியே னுரைப்ப தறிந்தருள்வாய்.

என்னிங் குள்ள தப்பாவென னெல்லே சொல்லப் படடு
றுன்னு மெல்லே யில்லாதென் சொல்லு நாளுர் நீயாரிம்
மனலு முலக மேதெனறு மயக்கந் தீர வருளென்ன
வன்ன தெல்லாங் தெரியவிரித தவனுக் கிவனன் றறிவித்தான். 44

வருநகற் பகவிண விரைந்தேக வந்தேன் பலசொல் வியும்பயனென்
சுருங்கச் சொல்லும் பயன்கேளாய் தோன்ற விகுள் ளதுவுரைத்
தொருங்கப் புறதது்ங் சித்தெல்லே யுள்ள துஞ்சித தெல்லையற
நெருங்குற் றதுரைத் தியான்சிதது நீசித துலக நிறைசிததே. 45

இதுவே சுருக்க மிவவறு தி யிதயங் கொண்டிவ ணகைக்கேற்ற
மதியா னின்னை நினைநீயே மாறு துணாந்து நோக்குதியே
லதனு லந்த மாம்பதத்தை யடைதி யோரே ழருந்தவரும்
புதிதோ தெயவ காரியததிற் புகுந்தா ரியாரும் போகுதுமால். 46

என்ன வெள்ளி யேகியபின் னெல்லா மறிவா முலகினைப்பாத்
துன்ன வொக்கு மொக்குமெனக் குசநா வுரைதத துணைமையதே
மூன்ன மவனி சிததுலகு மூன்றுஞ் சிதது நான்சிதது
நன்ன லான திசைசித்து நாட்டு கின்ற தெலாஞ்சிததே. 47

தெரிக்கும் பொருளுந் தரிசனமுந் தோந்து வெறுநிந மலவடிவாயப்
புரிக்கு முதயம விடாதெனறும பொலியும் பரமப் பொருளானேன்
வரிக்குங காட்சி யிலாவறிவே வடிவா யொருகா லெயெங்கும்
விரிக்கு நிறைவா யுபசாந்த வெளியா யறிவா மிகுபொருணன். 48

ஓங்குஞ் சிநமாத் திரப்பொருளா மோங்கா ரததை யுண்ணினைந்து
தூங்குந் தியாந பாலுகித தொடர்சங் கற்ப மெல்லாம்போய
வாங்குந் தொழிலே டுணையைய மநந ஞாந ஞேயமிவை [ன்.
தாங்கு ஞாதா வனைதுமறத் தனிச்சித் திரம்போ னெடிதிருந்தா

காற்றி லாத விளக்கொளிபோற் கலங்கா திருந்த மாவலிதான்
சீற்ற மயறீர்ந் தறனிறைந்து சிங்கை யென்னு மாசின்றித்
தோற்றுஞ் சத்தா மாத்திரத்தாற் சூடர்விட் டெறிந்த படிசொல்ல
லாற்றன் முகிறீர் சாற்காலத் தறவே தெளிந்த விண்போலும். 50

ஆங்கப் படியே யவனிருப்ப வவன தேவற் புரியசுர
ரோங்கற் கோயின் மேனிலத்தை யுற்று ருயர்மா வலிதாலு
நீங்கற் கரிய நிருவிகற்ப நிலைகூ சமாதி யெடுமபோது
தேங்குற் றதற்பின் விழித்துணர்ந்து மமதை தீர்ந்த சிங்கையனுய்.

பற்றி லாத மநத்தாலே பயின்றி ராச காரியங்கண்
முற்று மியற்றி யாபதது முதிர்சம் பததுஞ் சமமாகக்
குற்ற மில்லாக் குறிப்பாலே குறிப்புற் றின்ப துன்பத்திற்
சற்று மிதவா தமிழாது சமபா யனையிற் ருணனென். 52

ஓவா தவன்ற ஞுள்ளெழுந்த ஊகா போகம் பலகோடி
பாவா பாவம் பலகோடி பரந்த தெல்லா மிளைப்பாறி [களி
மேவா நின்று னெவ்விடத்தென் விண்ணின் மண்ணில் வேட்கை
ருவா நின்ற மநந்தன்னைத் தன்ன திதயத் துள்ளைப்பாய். 5

எங்கே யெங்கே மநமோடி யிளையோ வென்ன வீழ்ந்தழுந்து
மங்கே யங்கே நின்றெழுப்பி யகண்ட வறிவி லடைவிப்பாய்
சங்கே தமதா யிவ்வாறு சாதித் துளமா மதகரியை
வெங்கே தமறத் தளைத்தெல்லா விசாரத் தாலும் வீடணைவாம். 54

5—3. மாவலி கதை முற்றிறு

ஆக விருத்தம்—905.

5—4. பிரகலாதன் கதை.

பின்னு மீதோர் கதைகேட்பாய் பிர கலாதப் பெயரோனுந்
தன்ன துணர்வான் மெய்ஞ்ஞாந தது வதனைச சாதித்தா
னன்ன துரைப்பா மிாணியனு மசுர வேந்த னிறந்தளவே
யின்னல் கூரு மவன்மைந்த னிதய நடுங்கி யிவையுணர்ந்தான். 1

எனது தாதை முதலசுர ரெனது குலதே தாரெண்ணிறந்தோர்
கநக மேரு வணுவென்னக் காய நிலைமை பெரிதுடையோரா
வநச யோநி யதிகார மாற்ற வல்லோ தரவல்லோர் [தார்.
புனைவண் டுளவோ வனைஞங்கனலிற் பூள வீபோற் போயொழிந

அன்ன ரொக்கும் போசுர ரழியு மூழிப் பெருங்காற்றுற்
சின்ன கங்கள் போன்மடிந்தார் செறிநுண மணலிற் பலகோடி
யின்ன ளவனுக் கஞ்சாதா ரியாரு மிலலே யெமபகையா
மின்னர் நேமிப் படையோனை வெலவா னுபாய மீதானறே. 3

எத்தன் மையிரு லெண்ணுகிரு மிதில்வே றுயாந்த நெறியில்லை
தத்துந் திரைப்பாற கடலுறைவோன் சரண மன்றிச் சரணில்லை
சிதத மிந்தக் கணநதொடநகிச் சோக நாரா யணன்சரணம
பதத ஞகி நானவஞைப் பகிரா தொழிக பாவனையே. 4

நயந்த தெல்லா மெளிதருளு நாரா யணைய நமவென்னு
முயாந்த திருமந் திரமென்ற ஞளததில் வினணினின் மாருதமபோற
பெயாநது நீஙகா துள்ளுறைகப் பேணி யரியைப் பூசிப்போ
ரியைந்த வரிதா மப்பூசை யியற்றிற் பலரு மலதிலலே. 5

அந்த நெறியா லரியுருநா ஞகி யரியைப் பூசிப்ப
னிந்த வுடன்மா தயன்வடிவா மிதனில் வாயு யடிவாகிப்
பந்த முறுவோன் பராபரனு மிவனே பிராண பகநததின்
மூந்து மோட்டைத் தாவிரண்டா முகுந்த ஞகிப் புறத்துறைவான். 6

அவ்வா றுன விவ்வரிணை யகில வுபசா ரங்களோடுந்
தவ்வா மந்தா ளுளதாக்கிச் சதாபூ சனையே சமைப்பனனை
விவவா றெண்ணிப் பாரமெலா மெடுத்துச் சுமக்கு மந்தாலே
செவ்வான் மணிப்பாத் திராதூப தீபங் கந்த மெலாஞ்செறித்து.

மணிப்பூண் களுரம்பீ தாம்பாமும் வாடா மலரு நல்லமுதுங்
கணிப்பி லாத பொருளெல்லாங் கருத்தாற் பாவித் தருச்சித்துத்
தணிப்பி லாத வன்பான்முன் றந்தப் புறத்தின் பொருட்டியாளாற
பணிப்பா யவனை யுட்போலப் பரிந்து புறத்தும் பூசித்தான்.

ஆய வாறக் கணங்தொடங்கி யகண்ட வடிவப் பரம்பொருளா
மாய னடிக ளருச்சித்தா னவனைப் போல வாளசுரர்
தீய குணம்விட் டெல்லோருந் திருமாற் கடிமைத் திறம்பூண்டார்
மேய மன்னன் குணமன்றே விரிந்த வுயிரின் குணந்தானே.

திதிகா தலரு மவர்க்காசுர் செங்கண் மான்மேற் சினந்தீர்ந்து
புதிதா கியபத் தியிலடிமை புக்கா ரென்று புராந்தாளுங்
துதிவா னவருங் கேட்டலுமே துளுக்க மோடு வியப்பெய்தி
யதிபா தகர்க ளெம்பெருமாற் கன்பா கியதென் னெனவயிர்த்தா

திருப்பாற் கடலிற் கணவளருந் திருமான் முன்பு சென்றணுகி
விருப்பாற் றுதித்திக் திரன்மூதலோர் மேக மேனி யவனோக்கி
நெருப்பாந் தன்மை யசுரரெலா நினைப்பா வித்தா நின்வடிவா
யிருப்பா ராரு னன்மாயையென வெண்ணி மீளுமீ தென்னென்றே.1

கொடிய கொலைசெய் வல்லசுரர் குணங்க ளெங்கே பெறவரிய
மூடிவ தான பிறப்பெங்கே முகுந்தன் பத்திப் பேறெங்கே
கடிய தீயோர் நற்குணங்கள் கலந்தா ரென்று கதையல்லா
னெடிய மாலே நின்பத்தி நீசர்க் கெல்லா நேருமதோ.

எனற விண்ணோர்க் கெம்பெருமா னிமையோ ரஞ்சா தொழுமவனை
வென்றி பயிலும் பிரகலாதன் மீண்டும் பிறவாய் பிறப்புற்றான்

கன்று துயர்போய் மெய்ஞ்ஞாநக் கண்ணுல் வீடு காணுகுவ
லொன்று மிதனிற் கைதவமென் றுணாற் பால திலதாகும். 13

நல்லோ தீமை யுறிற்கேடாந தீயோர் நன்மை யுறினன்ரு
மெலலோ நும்போ மெனவருளி யெமமா ஞநகே மறைதலுமே
கல்லோ லஞ்சூழ் கடனின்றுங ககநா லயஞசோந தமரெலாம
புல்லா ரென்ற வசுரருடன் புரையி லாத தமரானூ. 14

என்பு குளிருமை பத்தியிஞ லிமைப்போ தொழியா தெப்போது
மன்பு கூர நெடுமாலை யசுரர் வேந்த னருசரிதான்
வன்பு பயிலு மூக்காணம் வழுவாப் பூசா பலதாலே
முனபு விவேக மாநந்த முதிராவும வாக முளேததெழுந்த. 15

சாத நஙகண் முதற்குணஙகள் சால வண்டா யிவனெஞ்சங
காத லான போகதத்திற கவலுமை பற்றுக் கழுன்றனவாற்
சீத முதது மூத்துடனே சோநதாற பற்றுச சோவுறுமோ
வாத லாலே போகதத்தி லழுநதா துள்ள மாறினதே. 16

பூன்ற வடிவுங காணுமற் போகத துள்ரு மழுந்தாம
ஞன்ற ஆச லாடுவதோ வல்லோ ஞள்ளந திரிவதனை
மூன்று சகதத்தின் சான்ரூன மூகுந்தன் றிருவுள் ளததுணாந்து
சான்ற குணததோதான் பூசிக்குந தனிமா மனையிற ரூனடைந்தான். 17

மூவ ராகி நின்றமூதன் மூல மடைந்த படியறிந்து
தேவ தேவன் றனைமுன்னர்ச் செயலி னிரட்டிடப் பூசனைசெய்
தியாவ ராலுங் காண்பரிய வெம்மா னம்மா வெதிர்ந்தனனென
ரூவ தான படியன்பா லவனைத் துதித்தா னசுரேசன். 18

அண்ட மென்னு மொருவீட்டி லரிய பொருள்சேர் சாக்கறையே
சண்ட பாநு வென்வுதயாத் தமுமற் ரூளிருந் தற்பரமே
கண்ட வுயிர்க ளனைத்திற்குங் களைக ணை வான்றுணையே
புண்ட ரீகை நாயகமே போற்றி போற்றி மிகப்போற்றி. 19

மேலோ ணெகிச் சகம்படைக்கும் விளையாட் டுடைய வித்தகனே
நாலோ டொருப தெனுமூலகி னண்ணு வுயர்ந்த நற்பொருளே
யாலோ ணெகிக் கண்வளராத வையா மெய்யா வருண்மூர்த்தி
பூலோ கத்தி னுயகமே போற்றி போற்றி மிகப்போற்றி.

கேத மிகுந்த வசுரரெனுங கிளைததா மரைக்கு ரெடும்பனியே
வேத நெறிசெசெல் லமரரெனுமை விரிதா மரைக்கு வெய்யோனே
பேத மறுத்தோ ருள்ளமெனும் பெருநதா மரையிற் பிரமமே
பூத மனைத்தி னுயகமே போற்றி போற்றி மிகப்போற்றி.

என்ப தான தறிவலவு மிசைப்ப விதயங் குளிர்ந்தருளி
யன்ப மறுத்துப் பிறவாவா ரூய வரங்கே ளெனைக்கருணை
மூனை ஐம்பைப்ப வனைத்திதய மூளரி யிலைஞ்சேர் முதற்பொருளே
துன்ப மில்லா வுயர்பதமே தருவே யருள்வா யெனச்சொன்னான்

சித்தப் பிரம மெல்லாம்போய்த் தெளிந்த பரம சுகம்பெற்றுச்
சுத்தப் பிரமத் திளைப்பாற முடிவாம் விசாரச் தோன்றுகவென்
றத்தப் பதுமம மலைமத்தருளி யமல னெக வவன்றுதியான்
மெத்தப் பரவி மலர்தூவித் தொழுதான் விவேகி களின்மிக்கோன்

பனிவார் கடலிற் றிரையென்னப் பரம புருடன் மறைந்ததற்பின்
னினிதாம் பதுமா தரத்திலிருந் திறைவன் றுதிக ளேத்தியபின்
சுநியா விசாரத் தந்தளித்தான் சரச மறுக்குந் தனிமூர்த்தி
நனிரா நம்மை யாரென்று நாடு வோமுள் ளெனநினைவான்.

யாரைர் முன்ன மெவரனே னினைத்தப் புவியா டம்பரத்தி
லாரை திருந்து நின்றேறுடி யழுது சிரித்து மகிழ்ந்தயர்ந்தே
னாரா வான சகமல்லே னகங்கல் புல்லு மண்மாங்க
டானெய்ப் புறம்பா யசேதனமாஞ் சகரா ளென்னைத் தக்கதுவோ.

இல்லா விடத்தண் டாய்மூக மெனலாய்க் காற்றி லியங்குவதாய்ச்
செல்லா நின்ற சிலநாளிற் சிதைந்து சடமா மூடனனே

நில்லா தாயப்பொய்க் கேதோன்றி நிராகா ரமதா யறிவினறிப்
புலலா வறிவிற் செவிக்குணவாயப பொன்றுரு சதத நாளுமோ. 26

தோலி லன்றி யறிவரிதாய்த் தோற்ற மின்றிக் கணத்திறந்து
கோலு மறிவா லறிந்தறிவு கூடாப் பரிச நானல்ல
காலி லசைந்து வசிததுருவாய்க் காதன் மிக்குக் கணத்திறக்குந்
தாலு வுணவாயத் திரவியத்திற் சனிததுச் சடமாஞ் சுவைநாளே.

கணததி னிறகருங காணபவறற்ற காடசி தனனிற பறருகிப
புணாப்பில் காணபா னிடததிறக்கும் போத மில்லா வொளிநாளே
குணக்கு லூக்கா மசிதநதாற குறிப்ப தாகிச் சடமாகி
மணக்கு நொய்ம்மை நியமஙகள் மருவு கந்த நாளுமோ. 28

என்தற் றெணணெ மெல்லாம்போ யிளப்பற் றைறந்து பொறிமயல்போ
யநக வறிவாயத தொழிலின்றி யறியும பொருடீ றறிவேயாய்க்
கநமா யுள்ளும் புறம்பினுநிட் களமா யுண்டா மாத்திரமாய்ச்
சநத மாண மிலாவெனனின்ன தயஙகக் கண்டேன் சத்தியமே. 29

ஆவா விப்போ துள்ளபடி யறியு நெறியி லலனையறிந்தே
னேவா விகற்ப மறறறிவுள் ளொளியாஞ் சீவ னுருவிதுவோ
தாவா தெஙகு மூளநாளுந் ததது வதநிற சகமெல்லா
மேவா நின்ற விரவிமுதற் கடமீ ருக விளங்கியதால். 30

உள்ளி லொளியாற் கணற்பொறிக ளொளிர்வ தென்ன வைம்பொறி
தெள்ளி யறியு மென்னுலே செறிசித் திரமாய்த் திகழ்ந்தனவாற்[யுந்
றள்ளி லயனே டுட்பட்ட தனிக்கற் பாந்தத் துயிரனைத்தும
வெள்ள வெளியா மப்போது மீளா தொளிரு மென்வடிவே. 31

இவரு ளென்றுள் ளெபற்று மெண்ண மெஙகே யெல்லையறப்
புவர மெல்லா நிறைந்தொளிரும் போத வடிவா மென்றனக்குக்
கவரு மாப்பா வனைதானே கருதி லுண்டோ முடிவில்சுகத்
தவணை யில்லா வுபசாந்த வுணர்வாங் கண்ணை யுலகெங்கும். 32

நோக்கப் பட்ட நோக்கெல்லா நுண்மை யறிவா நோக்கொன்றே
யாக்கப் பட்ட வுயிரினைத்தி னகத்தா யறிவ திலாவறிவாய்த்
தாக்கப் பட்ட தொன்றில்லாத தனிதனித் துவமாய்த் தனையன்றிப்
போக்கப் பட்ட தில்லாவெம் பொருட்டு வணங்கிப் புகழுதுமால். 33

அறவு நொய்தாய்ச் சமமாகி யவிகா ரமதா யதீதமா
யிறவு நிகழ்வோ டெதிராவென்ன வெண்ணுங் கால மூன்றிலதாய்ப
பிறவு நினைக்கு நினைவின்றிப் பேத மற்ற வறிவாலே
நிறைவி தான சத்தியெலா நேரே செய்யப் பட்டனவே. 34

தாக்கற் றொன்றி லறிவுக்குச் சமமே யொழிந்து கண்டதிலை
வாக்குக் கெட்டா மையிலுலே வசனங் களிறைச் சமந்தான்று [னைத்
நோக்கற் கரிதாம் பொயப்பொருள்போ லெய்தா யழியா நிராசைத
தேக்கிற் சம்பா வனைதானே திரைதீர் கடல்போற் சேடிக்கும். 35

செயலுஞ் செயலி லாமையுமாய்த் தியங்குஞ் செயலிற் சேரறிவு
பயிலுமை வலையிற் புட்போலப் பந்த மடையு மாதலிறன்
மயல்வெங் கோப மிரண்டாலும் வருந்தொந் தனையா மயக்காலே
யுயிர்க்க ளெல்லா நிலப்புழுப்போ லொன்று மகலா தாகுவதாம். 36

நீடுத் தகுமன் னுயிர்க்கெல்லா நெஞ்சத் துறைவாய் நெடுநாள்காக்
கூடப் பெற்றே னினையிந்தக் குறைவில் பேற்றை யார்பெற்றார்
தேடப் பட்டாய் பெறப்பெற்றாய் தெரிய நின்றாய் விகற்பமெலாம்
வீடப் பட்டா யெதுவானு மதுவாய் நின்றாய் மிகத்துதிப்பாம். 37

நானே நீயாய் நீநானுய் நூற வடிவாய் மூடிவின்றித்
தானே யாகி யண்டத்தின் றலையாய்ப் பரம தத்துவமாங் [திபோ
கோனே யுன்னைத் தொழுகின்றேன் கொண்டன் மறையா நிறைம
னோனைர் நினைவு களின்மறையா வொளியா முருவே யுனைப்பணிகே
ன். 38

உன்ன லென்னு மாவரண மொன்று மில்லா வெளியாகித்
தன்ன தான சுகவடிவிற் றானே விளக்கித் தன்வசமா

மென்ன துருவை யாண்பணிகே னிருந்து நடந்துஞ் சாந்தமுற்று
மன்ன தன்ன திலதாகு மனைததுஞ் செய்தும் பற்றிலதாம். 39

பல்ல வங்க டனையசைக்கும் பவநன் போல மநமுதலாய்ச்
செல்லுங் காணந கலையிந்தச் சித்தாம் புருட னைசைத்திடுமால்
வல்ல பாகர் நடத்துகின்ற வாசித திரள்போற் றனதான
வல்லண் மேவப் பொறியெலலா மவனே பரிக்கு மநவாதம். 40

இவனே தேடப் படுகிற்போ னிவனே துதிக்கப் படுகிற்போ
னிவனே தியாநிக் கப்படுவோ னிவனுண் மாண மயக்கொழிந்த
திவனே யெளிதி னெய்திடுவோ னிவனே நன்று யறிகிற்போ
னிவனே யெல்லா மநக்கமலத் திடையி லிருக்கு மிசைவனேடை. 41

மேவ லுற்ற போகத்தில் விருப்பு வெறுப்பு மெனக்கில்லை
யாவ தெய்து மதுவருக யாது போகு மதுபோகப்
பாவ மிகுமிவ வஞ்ஞாநப் பகைவ ரலே விவேகமெனு
மேவ மில்லாப் பொருளெல்லா மிழந்தே னுணர்வா லவைபெற்றேன்.

தினையு மநத்தான் மநமறுத்துத் துயர்செய் யகங்கா ரந்தீர்ந்து
நினைவா னினைவு போயசையா நிலைக்கே தனிக்கே வலநின்றேன் [த்
வினையா நினைவற நகங்காரமபோய் மேவு மநமபோய்த் தொழிலினறி
தனையே நிகர்கே வலதுதொடர்ச்சித் ததது வதுதென் வடிவிருக்கும.

காத லென்னுங கட்டறுத்துக் காய மென்னுங கூடகன்று
சாதன் மேவு மகங்காரமாந தனிப்புள் ளெநகே பறந்துளதோ
வேத மறுநீ நாநனீ யென்னு மொருமை யிருமையதா
யோதும் விதியான் மீணடொன்றி யுயர்நீ நாரு னீயாணம். 44

ஒழிவி லுலகின் சீரெல்லா முண்டா யிருந்து நீயிலையேல்
விழியி லவர்க்குப் பேரொழில்கூ மினரு ரைப்போல விளங்காதால்
வழுவி றேவே சயசாந்தி மன்னு மிடமே சயவேத
முழுதுக் கயலே சயவேத முளத்த விடமே சயவென்னு. 45

பிறக்கு மூதலே சயவென்றும் பிறவா மூதலே சயநானு
மிறக்கு மூதலே சயவென்று மிறவா மூதலே சயவென்று
சிறக்கு மநத்தாற் சிந்தித்துச் செம்பொற் பெயரோன் நிருமதலை
பறக்கும் விகற்ப மில்லாத பாம சமாதிச் சுகமுற்றான்.

நிருவி கற்ப சமாதியிலே நிகழ்சித் திரம்போ னிலைபெற்று
வருட மையா யிரஞ்செல்ல மாரு வொருபார் வையினிற்ப
வருண மணிசூழ் பாதலத்தி லாசி லாம லசுரரொலாங்
கருடன் முதற்புள் ளினங்கவாக் கலங்கு குளமீ னினமொத்தார்.47

ஆவ தாய காலத்தி லனேத்தா முலகி னெறியனேத்துங்
காவல் புரியுந் திருமெடுமால் கடல்வாய் விழித்துக் கண்வளர்வான்
றாவல் வருடக் கார்நாளிற் றுயிலைத் தவிர்த்து வொருகாலைச்
சேவல் கூருந் திருவுளத்திற் செகத்தி னெறியைச் சிந்தித்தான்.48

பேத மில்லாச் சாந்திபதம் பிரக லாதன் பெற்றிருப்ப
வேதன் சிருட்டி யழிந்துளவால் வெவ்வா ளசுர நிலாமையினு
லேத வசுர நில்லையெனி விகலற் றிமையோ ரெல்லோரும்
போத வுபசாந் தியராகிப் பொருவில் வீடு பொருந்துவரால்.

தேவ ருபசாந் தியையடையிற் செந்தீ வேள்வி தவமெல்லாம்
போவ தாகிப் பயனெல்லாம் பொருந்தா தெனையும் பொன்றிடுமா
லோவ லுற்ற கிளையெலா மொழிந்தாற் பூமி யொடுங்கிடுமாற்
சேவல் கூருந் திருவுளத்திற் கிளருஞ் சிருட்டி யற்றிடுமால். 50

இன்ன சிருட்டி சூனியமா யிரவி மதியோ டெலாமிறக்கிற்
பின்னர் யாமும் வடிவொழித்துப் பேத மில்லாப் பதமடைவோ
மென்ன காலத் தலாதிடையே தொல்லை ஞால மெலாமிறக்கி
லுன்ன நலங்கான் கிலமிதனுக் குறுதி யுபாய மூணர்ந்தனமால். 51

தானவ ருய்க வுய்ந்தாற் சமருண்டானுஞ் சமரு மூண்டேடல்
வானவ ருண்டா மூண்டேடன் மகந்தவ முண்டா மூண்டே

லானதோர் சிருட்டி யுண்டா மன்றெனிற் சிருட்டி மாளு
மூனமி லசுரர் கோனிவ வுடலொடு மூழி வாழ்க. 52

பரமமா மீச னுலே பாலிக்கு நடவு ணீதி
திரமுற விவவா றென்று சிந்திதத செசங்கண் மாய
னரவணைப் பாய னீங்கி யசுராகோ னருகு சேர்ந்தான்
பிரமலோ கத்தை யொக்கும் பெரியபா தலந கர்க்கே. 53

வேறு.

கருட வாகநத் துறைபவன் கவரிசேர் செங்கைத
திருமம டநதைவாழ் வலததின னேம்படை செறியு
மிருபு றததினன் றேவரு மூனிவரு மிறைஞ்ச
வருளு நாயக னசுரனே யுணாதியென் றருளி. 54

வலம்பு ரித்தொனி கிளப்பினன் மாதிரம் பிளப்ப
நிலம்பி ளப்புற நெடுநதிசை பிளப்புற நிமிாந்த
வலமபு மோதையான் மெல்லென மெலலென வறிந்தா
னலம்ப யப்புறு தற்பதத் தொனறிய நலலோன். 55

பிராண சத்திதான் பிரமரக் திரின்று பெயர்ந்து
புராத நப்படி நாடிக ளாலெஙகும் பொருந்தி
விராவ லுற்றன வொன்பது துவாரத்து மேவப்
பராப ரத்தினை யறிந்துளோ னறிவுசம் 56

அறிவு தோன்றியுட் பிராணதர்ப் பணநி
யறிவ தாம்பொரு ணேக்குற்ற தன்னதா மறிவு
பிறிவ தாமறி பொருளிலே மநத்தன்மை பெற்ற
பிறிவி லாமுகந் தர்ப்பணத் திருமைபெற் றதுபோல். 57

அற்ப முள்ளமங் குரித்தலு மரும்பவிழ் வுற்ற
வுற்ப லங்கள்போன் மெல்லென மலர்வுற்ற வொண்கண்

ணிற்ப தாய்ந்தம் புறுபொறி யறிவுக ணிறைய
நற்பி ராணனு மபாநனு மெங்கணு நடந்த. 58

அமைவில் காற்றுற்ற பதுமம்போ லைசவினை யடைந்தா
னிமைக ளுக்கிடை யளவிலே மாந்தடித் தெழுந்த
சமைவு றதுதெரி கண்மநம் பிராணன்மெய் தயங்கக்
ரமால் காண. 59

பரந்து நாட்டங்க ளேக்கின மநநமும் பருமை
நிரந்த ரித்தன வவ்வயி னவன்றனை நெடுமால்
சுரந்த வன்புட னேக்கியே யருள்செய்வான் றாயோய்
புரந்த ரன்புக ழுனதுசீர் நோக்குவாய் புரிந்து. 60

உடலை நோக்குதி யகாலத்தி லுன்னுடை யுடலை
விடநி னைப்பதென் பற்றுதல் விடுதல்சங் கற்பம்
படர்கி லாவுனக் கபாவமும் பாவமு முடலிற்
றொடரிற் சேதமென் னெழுதியா லிருத்தியாற் றாயோய். 61

சீவன் முத்தனு நீயிந்த வுடலொடுஞ் செங்கோற்
காவ லாளனுய்ச சுமையறக் கற்பமட் டிருப்பாய்
பாவ கன்சுடப் பன்னிரு கதிர்சுட வுலகம்
யாவ துங்கெடா திருப்பநீ யிறப்பதென் வாளா. 62

ஓங்கு மாசையாம் பாசத்தா லுறப்பிணிப் புண்டு
வீங்கு முள்ளுணர் வதன்வழி யோடியே மெலிந்து
தாங்கு செய்கையான் மநமிகச் சலிப்பவர்க் கன்றே
நீங்கு மேவிய மரணந்தான் சிறப்பது சகத்தில். 63

அகங்க ரத்தினை யகற்றியோ பற்றின்றி யனைத்துஞ்
சுகந்த ருஞ்சம மானவ ராயுவே சுகமா
மூகந்த வாசையுஞ் சினமுமற் றுட்குளிர் மதியாற்
செகங்க ளின்கரி யானவ ராயுவே சிறக்கும். 64

பற்று வான்பற்று பொருளிரண் டும்பயில் பந்த
மற்ற போதுப சாந்திதோன் றிடுமது நிலைமை
பெற்ற போதுவீ டெனுமபெய ரநிலை பெறுமால்
வெற்றி வீரசிங காதநத திருததியால் விளங்க. 65

குரைசெய் சங்கின தோசையாற் குழுறுற வந்த
புரையில் வானவர் மங்கலப் பணிசெயது புகழ
விரைவி லின்றுனை மாமுடி மிலச்சுவ னேன
யரசு செயகநீ யூழியி னளவென வருளி. 66

மங்க லப்புனல கொணர்கென மருசுர மாட்டிச்
சங்கு சக்கரந் தரித்தன கைகளாற் றேன
புங்க வதிரள் போற்றிடப் பொன்முடி சூட்டி
யங்க ணைச்சுத னசுராகோ னுக்கிவை யறைநதான். 67

தள்ளின் மேருவும் புவநமு மருக்கனுஞ் சசியு
முள்ள நாளெலா மரசுசெய் துயாகென வருளிக்
கள்ள மாயையின சிருட்டியொன் றெளிததல்போற் கணத்தில்
வெள்ள வானவா சூழாததெதாடு மறைநதனன விண்டு. 68

என்ன வோதிய வசிட்டனை யிராகவ னேக்கி
யன்ன தானவர்க் காசறுய வீடுற்ற வறிஞன்
தன்ன துள்ளமெய்ப் பாததிலே தனமய மான
பின்னர் மால்சங்கி னேசையாற் பிறந்ததெப் பரிசோ. 69

எனவி ரைவது மிராமனுக் கருந்தவ னுரைப்பா
ணனல்ப யின்றவித் தாமென வமலவா தனேதான்
கனமில் சிவந்முத் தருக்கெலா மிதயததின் கணேணை
சநத வங்குர மீண்டில தாகியே சாரும். 70

வேறு.

சுத்தமாய்ப் பரம மர்கித் தோற்றஞ்சா துதார மாகிச்
சுத்தமாஞ் சாத்தி கத்தைதத் தன்றியே விடாம லொன்றிச்

சுத்தவாத் துமத்தி யாந மயமதாய்த் துவக்கொான் றில்லாச்
சுத்தவா தனைக ணித்தஞ் சுழுத்திவா தனைபோ னிற்கும். 71

ஆயிர வருடஞ் சென்று மங்கமே யிருக்கி லுள்ளே
மேயதா மவுவ வத்தை மெல்லென வொாருபா னின்று
தேயல தாகித் தோன்றுஞ் செறியுமவ வவத்தை யாலே
தூயநற் சீவன் முதந ருணர்ச்சியைத் தொடர்வ ொன்றான். 72

5—4. பிரகலாதன் கதை முற்றிற்று.

ஆக விருத்தம்—977.

5—5. காதி கதை.

பிறப்பிறப்பாம் பெயருடைய விந்த மாயைப் பெருமையினை முடிவுபெறப் பேச வொணணை, வறட்பொரிய தன்மநதனை வென்றான் மாரு மல்லதொரு வகையாலு மகற்ற லாகாச், சிறப்புடைய வன்மாயை விரிவி லுள்ள சிதநிரந்தோன் றிடவுனக்குச் செப்புங் காதை, மறப்பறுசிந் தையலுகிக் கேட்டி யென்ன மனுகுலநா யகனுக்கு வசிட்டன் சொல்வான். 1

மண்ணுலகிற் கோசலமா மண்ட லத்தின் மறையவர்கோன் காதியென வழங்கும் பேரோ, னுண்ணினைந்தோர் கருமத்தைக் கிளையை நீக்கி யொருவம்புக் கொருவாவி யுதகத் தூடே, நனைநி யணி கழுத்தளவா யமிழ நின்று நற்றவஞ்செய் தெண்டிக்க ணைடந்த வெல்லை, கண்ணருளான் மாயவன்வந் தவன்முன் றோன்றிக் கருத்தென்கொ லளித்துமெனக் கழற லோடும். 2

சலநின்றுங் கையேறிக் காதி யென்னுந் தவமறையோன் கைதொழுது சகமண் டலத்தி, லலகிலுயிர் மாக்கமலத் தகலா

வண்டே யச்சுதனே யந்தாவென் றன்பாற் போற்றிச், சலமறு தற்பரத்திற் சம்பந திததுச் சநமமா ணத்துருவாற் சகங்க ளாகி, யலமருநீ டாச்சரியரு செய்வ தாய்நீ யளித்தமா யையைக்காண வருடி யென்றான். 3

அந்தணன்வெண் டலுமாயை காண்டி கண்டா லகற்றுதியே லகற்றுகென வருளி மாயன், கந்தருவ நகரம்போன் மறைத லோடுங் கருணைமூர்த் தியைக்கணட களிப்பி னலே, சந்ததமுட் குளிராகாதி யந்தக் கானிற் றவததொடுசின் னளிருந்து தானே யோர்நாட், சிநதனையி லரியுரைதத வுரையை நாடித் தேமலரோ ;கச செனறு னன்றே. 4

